உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

| | |
|---|---|
| பெயர் | :ராமநாதன்(அ.சா.4) |
| தகப்பனார் பெயர் | :குருசாமி |
| கணவர் பெயர் | : |
| வயது | :34 |
| கிராமம் | :அரும்பனூர் |
| வட்டம் | :மதுரை ஒத்தக்கடை |
| தொழில் | :விவசாயம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.02.2025

முதல் விசாரணை:

ஆஜர் 2, 8, 4 மற்றும் 3வது எதிரிகளை தெரியும். மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும், சேதுராமன் என்னுடைய மாமா ஆவார். 26.06.2017 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் வீரம்மாள் எங்கள் வீட்டிற்கு அருகே உள்ள முனியாண்டி கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்கு வந்தார். கண்ணாமணி என்னுடைய அண்ணன் அவரை தவறான வார்த்தைகளில் பேசிவிட்டார். வீரம்மாள் அவர் ஆட்களை அழைத்து வந்து என் அண்ணன் கண்ணாமணியை அடித்துவிட்டார்கள். 3வது எதிரி கணேசன் தண்ணியடித்துவிட்டு, எங்களை நீங்கள் பெரியாட்களா, நீங்கள் என்ன எங்கள் ஊர்க்காரரா என்று கூறி திட்டினார். ஆஜர் 3வது எதிரி கணேசன் மற்றும்1வது எதிரி பிரபு என் மாமா சேதுராமனை வலதுகாலில் கம்பியை கொண்டு அடித்துவிட்டார்கள். பிரபு கம்பியை வைத்து அடித்தார். கணேசன் அரிவாளை வைத்து சேதுராமனை காலில் வெட்டிவிட்டார். சேதுராமனை அதன்பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். நான் உடன் சென்றிருந்தேன்.

காவல்நிலையத்தார் என்னை விசாரணை செய்தார்கள் நான் நடந்தவற்றை கூறினேன்.

குறுக்கு விசாரணை :

கடந்த 26.06.2017 அன்று இந்த வழக்கில் 13வது எதிரியான வீரம்மாள் அவரை எனது அண்ணன் கண்ணாமணி என்பவர் அசிங்கமான வார்த்தையால் திட்டியுள்ள விபரத்தையும், அதனால் வீரம்மாள் அவரது ஆட்களுடன் வந்து கண்ணாமணியை அடித்த விபரத்தையும் நான் போலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தேன். வீரம்மாளை அசிங்கமாக பேசிய அது தொடர்பாக நடந்த பிரச்சினையில் இந்த வழக்கின் 3வது எதிரி கணேசன் கொடுத்த புகாரில வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் நானும் எதிரியாக இருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கணேசன் கொடுத்த வழக்கானது நானும், எங்களுடைய ஆட்களும் ஆஜர் 3வது எதிரி கணேசன் வீட்டின் முன்னால் நின்று பிரச்சினை செய்தது தொடர்பாக கொடுக்கப்பட்ட வழக்கு என்றால் சரிதான். 1வது எதிரி பிரபு, சேதுராமனை வலது காலில் கம்பியை கொண்டு அடித்த விபரத்தை போலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அதேபோல் 3வது எதிரி கணேசன் சேதுராமனை அரிவாளை கொண்டு வலதுகாலில் வெட்டிய விபரத்தையும் போலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் மேற்படி சம்பவம் தொடர்பாக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. போலிசார் நான் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது என்னை விசாரணை செய்தார்கள் என்று கூறினால் அது தவறாகும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு சம்பவம் எதுவும் 26.06.2017அன்று நடக்கவில்லை என்றும், நானும், எங்களது ஆட்களும் தான் 3வது எதிரி கணேசன் வீட்டிற்கு சென்று அவரது வீட்டிற்கு முன்பாக பிரச்சினை செய்து சண்டை செய்தோம் என்றால் சரியல்ல.

எங்கள் தரப்பில் கொடுத்த பொய்யான வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.20 20:18:54 +0530

Assistant Sessions Judge

Melur